00061

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் - மட்டம்-4
இறுதிப் பரீட்சை – 2018/2019
**ESD2231/EPD4531** கற்றல் - கற்பித்தல் புலக்காட்சி

பகுதி-**I** இல் அனைத்து வினாக்களுக்கும், பகுதி-**II** இல் எவையேனும் மூன்று(03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 27.09.2020 நேரம்: மு.ப.09.30 – பி.ப.12.30

## பகுதி -I

1. கற்றல், கற்பித்தல் என்பவற்றுக்கிடையேயான தொடர்பை சுருக்கமாக விளக்குக.

2. பிள்ளையின் கற்றல் செயலொழுங்கில் தாக்கம் செலுத்தும் காரணிகள் **மூன்றினை(03)** சுருக்கமாக விளக்குக.

3. முன்பள்ளிப் பிள்ளைகளின் கற்றல் முறையில் மாரியா மொண்டிசூரியின் தத்துவார்த்தப் பார்வையை ஆராய்க.

4. இடைநிலைக் கணிப்பீடு, இறுதி நிலைக் கணிப்பீடு ஆகிய பதங்களை வேறுபடுத்துக.

5. இலங்கையின் ஆரம்பக் கல்வியில் காணப்படும் முதன்மை நிலைகளை விளக்குக.

6. **'மாணவர் மையக் கற்றல்'** என்னும் பதத்தினை விளக்குக.

7. இளம் பிள்ளைகள் ஆக்கச் செயற்பாடுகளில் முன்னேற்றம் அடைய வேண்டியதன் முக்கியதுவத்தினை விளக்குக.

8. **'விருப்பத்துக்குரிய தேர்ச்சிகள்', 'அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள்'** ஆகிய பதங்களை வேறுபடுத்துக.

**(5x8=40** புள்ளிகள்)

## பகுதி -II

9.

i. **'கற்றல் - கற்பித்தல் சாதனங்கள்'** என்ற பதத்தினை பொருத்தமான உதாரணங்களினூடாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கில் கட்புல செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்தும் போது கட்டாயமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய காரணிகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. கற்றல்-கற்பித்தல் சாதனங்களை உங்கள் வகுப்பறையில் பயன்படுத்தும் போது எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினைகளை குறிப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

10.

i. **'மகிழ்ச்சிகரமான கற்றல்'** என்பதை பொருத்தமான வரைவிலக்கணத்தினூடாக விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. பிள்ளைகளின் கற்றலில் உடனடி ஊக்கலை அதிகரிப்பதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் எவை?

(06 புள்ளிகள்)

iii. முன்பள்ளியில் அல்லது ஆரம்பப் பாடசாலையில் பிள்ளைகளின் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்கும் **நான்கு(04)** அம்சங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

11.

i. **'கணிப்பீடு' 'மதிப்பீடு'** ஆகிய பதங்களை வேறுபடுத்துக.

**(04 புள்ளிகள்)**

ii. அவதானித்தலை ஒரு கணிப்பீட்டுச் சாதனமாகப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய **மூன்று(03)** உண்மைகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. கணிப்பீடானது மதிப்பீட்டிலும் பார்க்க சிறந்தது என்பதற்கு பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12.

i. ஆரம்ப வகுப்புகளில் பயன்படுத்தக் கூடிய கற்றல் கற்பித்தல் முறைகள் **நான்கைக்(04)** குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

ii. பிள்ளைகளுக்கு நேரடிக் கற்றல் அனுபவங்களை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. மிகவும் வினைத்திறனான கற்றல்-கற்பித்தல் முறையாக நேரடிக் கற்றல் அனுபவத்தை நீங்கள் எவ்வாறு பிள்ளைகளுக்கு வழங்குவீர்கள் என்பதை பொருத்தமான உதாரணங்களினூடகா விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13.

i. பிள்ளை மையக் கற்றல் தொடர்பான ரூசோவின் தத்துவார்த்தப் பார்வையை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. முன்பள்ளிகள், ஆரம்ப வகுப்புக்கள் என்பவற்றில் ஆக்க பூர்வமாக கற்றல் சூழலை உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. உமது வகுப்பில் எவ்வாறு ஆக்க பூர்வமான கற்றல் சூழலை உருவாக்குவீர் என்பதை பொருத்தமான உதாரணத்தின் ஊடாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**